V.C– Deposition of Witness

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 374/2024 |
| Police station | : | நெல்லிக்குப்பம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW 15 / PW 6 |
| Name | : | திரு. சீனிவாசன் (காவல் ஆய்வாளர்) |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 23.07.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர்).

இந்த சாட்சி விசாரணை காணொலி மூலம் பதிவு செய்யப்படுகிறது. காணொலியின் ஒரு முனையில் நீதிபதியும், அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D. நிவேதா அவர்களும், நீதிமன்ற ஊழியர்களும் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வேல்முருகன் அவர்களும் இருக்கிறார்கள். காணொலியின் மற்றொரு முனையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ள சாட்சியான திரு. சீனிவாசன் (காவல் ஆய்வாளர்) அவர்களும் உள்ளார்கள். இரு தரப்பினர் சம்மதத்தின் பேரில் இந்த சாட்சியின் விசாரணை காணொலி மூலம் பதிவு செய்யப்படுகிறது.

மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி காணொலி மூலம் முன்னிலையாகி பிரமாணத்தின் பேரில் அரசு தரப்பில் முதல் விசாரணை மற்றும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சென்னை பெருநகர G-2 பெரியமேடு காவல் நிலையத்தில் சட்ட ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நான் கடந்த 31.05.2023 ம் தேதி நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் நிலைய பொருப்பில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. செல்வகணபதி என்பவர் அன்றைய தினம் 21.00 மணியளவில் செட்டிப்பட்டறை காலணி திருவதிகையை சேர்ந்த தேவராஜ் மகன் முரளி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண். 262/2023 சட்டப் பிரிவுகள் 279, 304-அ பிரிவின் படி வழக்கு பதிவு செய்து கணிணி முதல் தகவல் அறிக்கை தயார் செய்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பினை எனது பார்வைக்கு வைத்தார். வழக்கின் கோப்பினை பெற்றுக்கொண்ட நான் 01.06.2023 ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்தமிழன் மற்றும் பிச்சாண்டவர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகள் இருவரிடமும் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் முரளி, ஸ்ரீமுருகன், அருண்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் வைத்து காலை 10.30 மணிக்கு பிரேத விசாரணை முடிக்கப்பட்டு முதல் நிலை காவலர் 1060 திரு. அறிவழகன் என்பவரின்

உதவியோடு இறந்து போன முத்தமிழ் என்பவரின் பிரேதத்தினை பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பஞ்சாயத்தார் சாட்சிகள் மணிகண்டன், கார்த்திகேயன், சாந்தகுமார், வீரமுருகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் நிலை காவலர் 1060 திரு. அறிவழகன் என்பவரின் மூலம் மேற்படி முத்தமிழ் என்பவரின் இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு அவரது பிரேதத்தினை சடலக்கூறாய்வு செய்ய வேண்டி மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் வைத்தேன். பின்னர் வழக்கு சம்பவத்தில் இவ்வழக்கில் விபத்துக்குள்ளான வாகனமான TN–31–CU–9684 என்ற பதிவெண்கொண்ட Honda Unicon இரு சக்கர வாகனத்தை கடந்த 06.07.2023ம் தேதியில் பண்ருட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 29.07.2023 அன்று நிலையத்தில் ஆஜரான வழக்கின் எதிரி அருண்பிரசாத் என்பவரை காரணம் கூறி கைது செய்து உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி தக்க இரு நபர் ஜாமினில் விடுவிக்கப்பட்டார். பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN–31– BK– 6022 என்ற பதிவெண்கொண்ட Hero splender plus என்ற வாகனத்தை 01.08.2023 ம் தேதியில் பண்ருட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து பின்னர் மோட்டார் வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. விஜய் என்பவரை விசாரணை செய்து மேற்படி வாகனங்களுக்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று வந்தேன். **மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 02.08.2023 ம் தேதி கடலூர் அரசு மருத்துவமனை சென்று இறந்துபோன முத்தமிழ் என்பவருக்கு விபத்து பதிவேட்டில் பதிவு செய்த மருத்துவர் திரு. யக்னேஸ்வரராஜா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று வந்தேன். **மேற்படி விபத்து பதிவேடு**

**அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இறந்துபோன முத்தமிழ் என்பவரின் பிரேதத்தினை சடலக்கூறாயவு செய்த மருத்துவர் திரு. கபிலன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வந்தேன். **மேற்படி பிரேத பரிசோதணை அறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினமே பிரேத விசாரணைக்கு உதவியாக இருந்த முதல் நிலை காவலர் 1060 திரு. அறிவழகன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. செல்வகணபதி என்வரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அத்துடன் எனது புலன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரி அருண்பிரசாத் என்பவருக்கு எதிராக சட்டப் பிரிவுகள் 279, 304–அ இதசாவின் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

இவ்வழக்கில் சம்பவத்தில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் விபத்து சாலையின் எந்த பகுதியில் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் கிழக்கு திசையில் சாலையின் ஓரத்தில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் எதன் அடிப்படையில் சம்பவ இடம் குறியீடு செய்யப்பட்டது என்றால் புகார்தாரர் அடையாளம் காட்டியதன் அடிப்படையில் குறிப்பிடிப்பட்டது. புகார்தாரர் எனது விசாரணையில் கிழக்கு திசையில் சாலையின் ஓரத்தில் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. பார்வை மகசரிலோ, வரைபடத்திலோ இரத்த கறை பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு மறு நாள் காலை சென்றதால் அங்கு இரத்த கறை காணப்படவில்லை. இந்த விபத்தானது குறிப்பிட்ட ஒரு செயலால் விபத்து ஏற்பட்டதாக அரசு தரப்பு சாட்சிகள் குறிப்பிட்டுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும், அதிவேகமாகவும் வந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள். சாட்சி ஸ்ரீமுருகன் மற்றும் முரளி இருவரும் அவர்களுக்கும் இறந்துபோனவர் சென்ற வாகனத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு

இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்களா என்றால் இல்லை. ஸ்ரீமுருகன் மற்றும் முரளி ஆகியோர்களில் யார் அவர்கள் வந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டினார்கள் என்று கூறினார்களா என்றால் அதை பற்றி விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் இறந்துபோனவரின் உடல் உள்ளுருப்புகளை இரசாயண பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். இறந்துபோனவரின் உள்ளுருப்புகளை இரசாயண பரிசோதனைக்கு அனுப்பியிருந்தால் அவர் மது அருந்தியிருந்தாரா என்று தெரிந்துகொள்ளலாம் என்றால் சரிதான். அ.சா.ஆ.9 இறந்து போனவரின் வயிற்று பகுதியில் 150 ML அளவுகொண்ட பகுதி செரிமானமான உணவு பொருட்களும் அதனுடன் ஆல்கஹால் வாடையுடன் காணப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தானது இறந்துபோனவர் மது தாக்கத்தில் இருந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக முறையாக விசாரணை செய்திருந்தால் எதிரி மீது இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்திருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும் கடலூர் அரசு மருத்துவமனைக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 13 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அடிப்பட்டவரை இரு சக்கர வாகனத்தில் 1/2 மணி நேரத்தில் மருத்துவமனைக்கு அழைத்து வந்துவிடலாம் என்றால் சரியல்ல. அடிப்பட்ட நபரை 1/2 மணி நேரத்தில் மருத்துவமனைக்கு அழைத்து செல்ல இயலாது. இறந்துபோனவருடன் இருந்த நபருக்கு தலையில் அடிப்பட்டிருந்த நிலையில் கண்ணுற்ற சாட்சிகள் தங்களது இரு சக்கர வாகனத்தில் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை மேற்கொள்வதற்கு ஏதேனும் முயற்சி செய்தார்களா என்பது சம்பந்தமாக எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் 108 ஆம்புலன்சுக்கு போன்செய்து முதலுதவி கொடுத்து அழைத்து செல்ல முயற்சி செய்து 108க்கு போன் செய்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். விபத்து சம்பவமானது நான் இறுதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடைபெறவில்லை என்பதாலும் இறந்துபோனவரின் குடும்பத்திற்கு நஷ்டயீடு பெறவேண்டும் என்பதற்காக உண்மை சம்பவத்தை மறைத்து எதிரி மீது இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றாலும் அவரை நான் காவல்நிலையத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் எண்.1
கடலூர்.

சாட்சியின் கையெழுத்து

காணொலி மூலம் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சர் மூலம் தட்டச்சு செய்து சரிபார்த்து பிழைகளை சரிசெய்து மீண்டும் சாட்சியிடம் வாசித்து காண்பித்து சாட்சி சரியாக உள்ளதாக ஒப்புக்கொண்டார். அதனை உறுதிபடுத்திய பின்னர் அது குறித்து நகல் இ–மெயில் மூலம் சாட்சிக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் அதில் சாட்சி கையெழுத்திட்டு அந்த லென்ஸ் ஸ்கேன் செய்து நீதிமன்றத்திற்கு இ–மெயில் மூலம் இன்றைய தினமே திரும்பி அனுப்பி வைக்கவேண்டும் என்றும் சாட்சியின் மற்றொரு நகலை எடுத்து அதில் 4(viii) Madras High Court Video conference rule 2018 ன் படி Coordinator ஆக நீதிமன்றத்தில் நியமிக்கப்பட்ட திருமதி. ஜமுனாராணி Woman SSI காவல் இணை ஆணையரக அலுவலகம், கிழக்கு மண்டலம், எழுப்பூர் சென்னை அவர்கள் முன்னிலையில் சாட்சி கையெழுத்திட்டு மேற்படி அதிகாரி சான்றொப்பம் செய்து நீதிமன்றத்திற்கு தபால் மூலம் அதனையும் அனுப்பி வைக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி சாட்சியம் பதிவு செய்யப்பட்ட போது உள்ள ஆடியோ, வீடியோ பதிவினை அதன் Hash Key Value குறிப்பிட்டு பாதுகாப்பாக வைக்கவும் உத்தரவிடப்படுகிறது.

சாட்சியின் கையெழுத்து

நீதித்துறை நடுவர் எண்.1
கடலூர்.

The witness devised at remote point I was present, the deposition was read over to the witness admitted to be correct and signed before me

Coordinator at remote point:

திருமதி. ஜமுனாராணி Woman SSI காவல் இணை ஆணையரக அலுவலகம், கிழக்கு மண்டலம், எழுப்பூர் சென்னை.